**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 238/2016 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.4 |
| Name : | திருமதி. திலகவதி |
| Father's/Husband Name: | திரு. கலியமூர்த்தி |
| Village : | மங்களமேடு காவல் நிலையம் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 36/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 15.04.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

(**எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர் )**

**முதல் விசாரணை**

i) நான் தற்போது மங்களமேடு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் நடராஜன் ஆவார். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 23.08.2018ம் தேதி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் பணியிலிருந்த போது பச்சைமுத்து மனைவி முத்தம்மாள் என்பவர் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் அடிதடி வழக்கு சம்மந்தமாக சிகிச்சையிலிருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் மருத்துவமனை சென்று முத்தம்மாளிடம் வாக்குமூலம் பெற்று வந்து மங்களமேடு காவல் நிலைய குற்ற எண் 356/2012, இதச பிரிவுகள் 294(b), 323, 324, 354, 506(2) ன்படி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை முறையே அ.சா.ஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

வழக்கு கோப்பினை புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சம்பவயிடத்திற்கு 23.08.2012ம் தேதி சென்று சாட்சிகள் கலைராஜ், கொளஞ்சி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடம் குறித்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவை **முறையே பார்வை மகஜர் அ.சா.ஆ3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ4ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் சாட்சிகள் முத்தம்மாள், பச்சைமுத்து, மணிகண்டன், மருதமுத்து, கலைராஜ், கொளஞ்சி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இந்த வழக்கின் எதிரி ரமேஷ் என்பவரை கைதிற்கான காரணம் கூறி கைது செய்து அடைப்பு காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். மற்றொரு எதிரி கோபால் முன்பிணை பெற்றுள்ளதால் அவரை கைது செய்யவில்லை. காயம்பட்ட புகார்தாரர் மற்றும் பச்சமுத்து இருவருக்கும் சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் அர்ஜீனன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். முத்தும்மாளின் **விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றுகள் அ.சா.ஆ5 மற்றும் அ.சா.ஆ6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பச்சமுத்துவின் **விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றுகள் அ.சா.ஆ7 மற்றும் அ.சா.ஆ8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இறுதியாக புலன் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 294(b), 323, 324, 354, 506(2) ன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் எந்த சாட்சிகளையும் நான் நேரடியாக விசாரிக்கவில்லை என்றாலும் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரிதான். சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வாதி கொடுத்த பொய்யான புகாரை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகளின் மீது தவறான குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.